தொடக்கக் கல்வி இயக்ககம் 21 OCT 2014 600 006.
DIRECTOR DEE 20 OCT 2014

பள்ளிக்கல்வித் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை—9

அரசுக் கடித எண்.28064/தொக3(2)/2014 நாள் 15.10.2014

030881

அனுப்புநர்
திருமதி.த.சபிதா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள் மற்றும்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை—6
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை—5
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை—35
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை—79
கருவூல கணக்கு ஆணையர், சென்னை—15

ஐயா,

பொருள்: தொடக்கக் கல்வி —மைய அரசின் கரும்பலகைத் திட்டம்—நான்காம் கட்டத்தின்கீழ் தொடக்கப் பள்ளிகளில் 1610 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.01.2014 முதல் 31.12.2014 வரை தொடர் நீட்டிப்பு கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது—ஏப்ரல் மற்றும் மே 2014 ஆகிய இரண்டு மாதங்களுக்கான அதிகார ஆணை (Pay Authorisation) வழங்கப்பட்டது ஜூன் 2014 முதல் செப்டம்பர் 2014 ஆம் மாதங்களுக்கான சம்பளம் வழங்க அதிகார ஆணை (Pay Authorisation) கோருதல் குறித்து

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.416,பள்ளிக் கல்வி, நாள் 18.11.1998
2. அரசாணை (2டி) எண்.52, பள்ளிக் கல்வி (க்யூ1) துறை, நாள் 20.11.2007
3. அரசாணை (2டி) எண்.2, பள்ளிக் கல்வி (க்யூ1) துறை, நாள் 24.01.2012
4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண்.036486/கே4/ 2013 நாள் 05.04.2014
5. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண்.036486/ கே4/ 2013 நாள் 12.05.2014
6. அரசுக் கடித எண்.16183/தொ.க.3(2)/2014, நாள் 28.5.2014
7. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண்.036486/ கே4/ 2013 நாள் 20.8.2014

——

பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி மைய அரசின் கரும்பலகைத் திட்டம் நான்காம் கட்டத்தின்கீழ் தொடக்கப் பள்ளிகளில் தற்காலிகமாக 1610 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. பார்வை இரண்டு மற்றும் மூன்றில் கண்ட அரசாணைகளின்படி 31.12.2013 வரை பணியிட நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது. பார்வை

www.kalvikural.com

நான்கில் காணும் கடிதத்தில் மேற்காணும் தற்காலிக பணியிடத்திற்கு 01.01.2014 முதல் 31.12.2014 வரை பணியிட நீட்டிப்பு கோரி கருத்துரு தொடக்கக் கல்வி இயக்குநரால் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. பார்வை ஆறில் காணும் அரசுக் கடிதத்தில் மேற்கண்ட அரசாணையில் உள்ள தற்காலிக பணியிடங்களுக்கு ஏப்ரல் மற்றும் மே 2014 ஆகிய இரு மாதங்களுக்கு அதிகார ஆணை (pay authorization) வழங்கப்பட்டது. தற்போது ஜுன் 2014 முதல் செப்டம்பர் 2014 முடிய நான்கு மாதங்களுக்கு ஊதியம் பெறத்தக்க வகையில் சம்பளம் வழ்ங்கும் அதிகாரம் (pay authorization) வழங்குமாறு தொடக்கக்கல்வி இயக்குநர் அரசை வேண்டியுள்ளார்.

2. பணியிட தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள 1610 தற்காலிக பணியிடங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியம், உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் ஜுன் முதல் செப்டம்பர் 2014 முடிய உள்ள மாதங்களுக்கான சம்பளப் பட்டியல்களை அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

3. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.48250/Edn-II/2014, நாள் 7.10.2014–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்
நிதி (கல்வி-II) துறை, சென்னை–9
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6
இருப்புக்கோப்பு

ந.க.எண்: 036486/K4/2014 நாள் 24.10.2014

அரசு கடித நகல் தக்க நடவடிக்கைக்காகவும் அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பலாகிறது. உடனடியாக ஜுன் 2014 முதல் செப்டம்பர் 2014 முடிய ஊதியத்தை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்டத் தொடக்கக்
கல்வி அலுவலர்கள்.

www.kalvikural.com